# குறளில் அரசியலும் பொருளியலும்

முனைவர் அ. விசயராசன்

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பெரிய வட்டங்களுக்குள் இம்மையையும், மறுமையையும் உள்ளடக்கி, ஒருவர் எந்தக் கோணத்திலும், திருக்குறளைப் படித்து பயன் பெறும் விதத்தில் இரண்டடி, ஏழு வார்த்தைகளுக்குள் அடங்கிய 1330 குறட்பாக்களில், பொருட்பாலுக்கு அதிகச் சிறப்பிடம் அளித்துள்ளார் வான்புகழ் வள்ளுவர். இதனைத் திருக்குறளின் 133 அதிகாரங்களையும், அவற்றில் அடங்கும் குறட்பாக்களையும் வைத்துப் பார்க்கையில் நாம் அறிய முடிகிறது.

| | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|
| அறத்துப்பால் | 38 | 380 |
| பொருட்பால் | 70 | 700 |
| இன்பத்துப்பால் | 25 | 250 |
| | --------------- | -------------- |
| | 133 | 1330 |
| | --------------- | -------------- |

இதில் பொருட்பாலுக்கு 70 அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பொருட்பால் அரசியல், அங்கவியல், குடியியல் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கு முறையே 25, 32, 13 அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது. அரசியல் அதிகாரங்கள் அன்றாட வாழ்க்கையில் மன்னன் முதலாக அனைத்துப் பிரிவினரும் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகளையும், குடியியல் அதிகாரங்கள் நாட்டின் குடிமக்களின் பண்புகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. பொருட்பாலின் 70 அதிகாரங்களில் 32 அதிகாரங்கள் அங்கவியலுக்கு அளிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. பொருட்பாலைச் சற்றே ஊடுருவிப் பார்க்கையில்,

இன்றையப் பொருளியலுக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வள்ளுவப் பெருந்தகை வழிவகுத்துள்ளதைப் பார்க்கிறோம்.

அறத்துப்பாலிலும், 25வது அதிகாரமான அருளுடைமையில், 247 வது குறட்பாவில்,

அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு ( 247 )

என்று கூறியதன் மூலம், இவ்வுலக வாழ்க்கையில் பொருளின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை.

அரசியலும் பொருளியலும்

அன்றும் இன்றும் பொருளியல் என்பது அரசியலோடு இரண்டறக் கலந்த ஒன்றாகவே இருந்துள்ளது. ஒரு நாட்டில் உறுதியான அரசியல் நிலைப்படும். நல்ல அரசும் அமைந்துவிட்டால் அந்நாட்டின் பொருளாதாரம் மேம்படையும். இன்றைய பொருளியலுக்கு வித்திட்ட, பொருளியலின் தந்தை எனப்படும் ஆடம்சுமித், 18 ஆம் நூற்றாண்டில் தான் வெளியிட்ட "நாடுகளின் செல்வம் " ( Wealth of Nations ) என்ற நூலில் " அரசியல் பொருளாதரம் " ( Political Economy ) என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். அவர் மட்டுமின்றி, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிய 18, 19 ஆம் நூற்றாண்டுப் பொருளியலறிஞர்களும் அவ்வாறே அரசியல் பொருளாதாரம் என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இதனைச் சுட்டிக் காட்டும் வகையில் திருவள்ளுவர் பொருட்பாலின் துவக்கத்திலேயே அரசியல் என்ற அத்தியாயத்தை முன்வைத்து அதற்கு 25 அதிகாரங்கள் ஒதுக்கியுள்ளார்.

அன்றைய அரசியலில் மன்னராட்சியே எங்கும் நிலவியதாக வரலாற்றின் வாயிலாக அறிகிறோம். பரம்பரை உரிமை வழியிலோ, அல்லது படையெடுப்பின் மூலமாகவோ மன்னர்கள் உருவாகி நாடுகளை ஆண்டு வந்தனர். கால ஓட்டத்தில் சமுதாயத்தில்

பலவகையான மாற்றங்கள் ஏற்பட்டபோது, மன்னராட்சி பெருவாரியான நாடுகளில் மறைந்து, ஒரு சில மிகச்சிறிய நாடுகளைத் தவிர, தற்போது உலகின் பல நாடுகளில் குடியாட்சி அல்லது மக்களாட்சி நிலவி வருவதைப் பார்க்கின்றோம். எனவே, அரசியல் அதிகாரங்களில் ஆட்சிமுறையைப் பற்றித் திருவள்ளுவர் கூறுமிடங்களில் அரசு என்று வைத்துப் பார்த்தோம் எனில், அன்று மன்னராட்சிச் சிறப்படைய வள்ளுவர் வகுத்த வழிமுறைகள் இன்றைய அரசுகளுக்கும் மிகவும் பொருந்தும் என்பது விளங்கும்.

**இறைமாட்சி**

பொருட்பாலின் முதல் அதிகாரமான இறைமாட்சியில் உள்ள பத்துக் குறட்பாக்களுமே, ஒரு அரசன் அல்லது அரசு எவ்வாறு அமைதல் வேண்டும், எங்கனம் செயல்படவேண்டும் எனக் கூறுகின்றன.

1. முதல் குறட்பா, ஒரு சிறந்த அரசுக்குத் தேவைப்படும் ஆறு அம்சங்களான, வலுவான படை, நல்ல மக்கள், தேவையான பொருள் அல்லது நிதி, நல்ல அமைச்சர்கள், நட்புறவு நாடுகள் மற்றும் பாதுகாப்பு அரண் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. இன்றைய அரசுகளுக்கு, மேற்குறிப்பிட்ட ஆறு அம்சங்களில் பாதுகாப்பு அரண் என்ற ஒன்றைத் தவிர இதர ஐந்து அம்சங்களும் இன்றிமையாதவை எனலாம். அரணுக்குப் பதிலாகப் பாதுகாப்புப் படைகளை ஒவ்வொரு நாடும் தன்னகத்தே கொண்டுள்ளது.
2. இறைமாட்சியின் இரண்டாவது குறட்பா, அச்சமின்மை, கொடை, அறிவு, ஊக்கம் ஆகிய பண்புகள் ஒரு அரசுக்கு இருத்தல் அவசியம் எனச் சுட்டிக் காட்டுகிறது.
3. மூன்றாவது குறட்பா, சோம்பியிராமை, கல்வி, துணிவு ஆகிய மூன்று பண்புகள் ஆட்சியாளருக்கு இருத்தல் அவசியம் என வலியுறுத்துகின்றது.

4. நான்காவது குறட்பா, ஒரு நல்ல அரசிடம் காணப்பட வேண்டிய அறநெறி தவறாமை, கொடியன ஒழித்தல், போர்ப்பண்பு, நிலை தவறாமை ஆகிய அம்சங்களைச் சுட்டிக் காட்டுகிறது. ( பயங்கர வாத ஒழிப்பு )
5. இறைமாட்சியின் பின்னணியில் அமைந்த ஐந்தாவது குறட்பாவில் ஒரு அரசின் பொருளாதாரக் கடமைகளை வலியுறுத்துகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு ( 385 )

எனும் இக்குறள் ஒரு அரசின் நிதியாண்மையை (Fiscal Management) வலியுறுத்துகிறது. ஒரு திறமையான அரசு பொருள் வரும் வழிகளை உண்டாக்கி அப்பொருளைத் தொகுத்து அதனைக் காப்பாற்றி, அப்பொருளை முறையாகச் செலவிடல் ஆகியவற்றைச் செவ்வனே செய்தல் வேண்டும். இன்றைய அரசுகளின் தலையாய கடன் இதுவேயெனில் அது மிகையாகாது. நிதியாண்மையை ஒரு அரசு சரிவரக் கடைப்பிடிக்கவில்லையெனில் அது வேறு பல சிக்கல்களையும் எதிர் நோக்க வேண்டியிருக்கும்.

இன்றைய அரசுகளின் நிதியாண்மையில் வரிமுறைகள், அரசின் பொதுச் செலவுகள் மற்றும் பொதுக்கடன் ஆகியவை அடங்கும். ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்தைய சூழலில் அரசின் பொருளாதாரக் கடமைகளை வலியுறுத்திய வள்ளுவப் பெருந்தகை, பொதுக்கடன் பற்றி ஏதும் கூறவில்லை. காரணம், அன்றைய நாளில், வருவாய்க்குட்பட்ட செலவுகள் வருவாய்க்குட்பட்ட வாழ்க்கை எனும் நெறிகளுக்குட்பட்டு மக்களும் மன்னர்களும் வாழ்ந்தனர். தவிர, இன்றைய நாளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் பணம் எனும் ஊடகம் அப்போது இருக்கவில்லை. பணம் எனும் ஊடகம் தோன்றிய பின்னரே, வருவாய்க்கு மிஞ்சிய செலவு, பலவகையான கடன்

முறைகள் என்ற வழக்கம் தோன்றி, அதுவே இன்று மிகப்பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது.

மற்ற ஐந்து குறட்பாக்களில், அதாவது இறைமாட்சியின் 6,7,8,9,10 குறட்பாக்களில் மன்னனின் எளிமையான தோற்றம், இன் சொல் கூறல், நீதி தவறாமை, குறைகளைக் கேட்டல், மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுதல் ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன. ஆக, இறைமாட்சி எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் பெரும்பாலும் ஆட்சியியல் மற்றும் நிதி மேலாண்மை ஆகியவற்றையே வலியுறுத்துகின்றன.

கல்வியும் பொருளாதார முன்னேற்றமும் :

அடுத்த வரக் கூடிய மூன்று அதிகாரங்கள் கல்வியின் சிறப்புக்கள், கல்லாமையின் தீமைகள், கேள்வியின் நன்மைகள் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டுகின்றன. கல்லாமையின் தீமைகளை உணர்ந்த பல நாடுகள் பல ஆண்டுகட்கு முன்னரே தமது மக்களின் கல்வி மேம்பாட்டுக்குத் திட்டங்கள் வகுத்து, இன்று கல்வியில் பெருவாரியான நாடுகள் முன்னனியில் உள்ளன இந்தியாவிலும் இன்று கல்லாதோர் சதவிகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. ஒரு நாட்டில் கல்வி முன்னேற்றம் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும் என இக்குறட்பாக்களில் மறைமுகமாக வலியுறுத்தப்படுவதைக் காண்கிறோம். கேள்வி எனும் அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்கள் உலகத் தமிழ் சங்கம் பன்னாட்டுத் திருக்குறள் மாநாடு போன்ற பல்வேறு அமைப்புகள் மூலமாக மேற்கொள்ளப்படும் கருத்துப் பரிமாற்றங்களைக் குறிக்கின்றன. இது மிக அழகாக கேள்வி எனும் 42வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை ( 411 )

என்ற முதற்குறளிலும்,

செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும் ( 412 )

என்ற இரண்டாவது குறளிலும் வெளிப்படுகின்றது.

பெரியாரைத் துணைக் கோடல் என்ற 45வது அதிகாரத்தில், உள்ள 448வது குறளில்

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும் ( 448 )

என்று வள்ளுவர் கூறியிருப்பது இன்றும் சாலப் பொருந்தும் ஒரு கருத்தாகும். இன்றைய மக்களாட்சி முறையில், அமைச்சர்களும், மக்களவைப் பிரதிநிதிகளும் கூடி பல்வேறு முக்கியமான முடிவுகளை மேற்கொள்ளுகையில் அரசு அமைப்பில் பணியாற்றுகின்ற, பயிற்சி பெற்ற, அனுபவமிக்க வல்லுனர்களைக் கலந்தாலோசித்தல் மிக மிக அவசியம். அங்ஙனம் இல்லாவிடில், அரசு அமைப்பிற்கும் ஆட்சியாளருக்கும் இடையே விரிசல் ஏற்பட்டு அரசு நிலை தடுமாறிப் போகக் கூடும்.

செலவு - பயன் அணுகுமுறை

இன்றைய பொருளியல் சிறப்பான இடம் பெறும் செலவு- பயன் பகுத்தாய்வு ( Cost Benefit Analysis ) என்ற கருத்து கடந்த சுமார் 50 ஆண்டுகளாகப் பரவலாகப் பயன்பாட்டில் இருப்பினும், தனது பொய்யா மொழித் திருக்குறளில் 2000 ஆண்டுகட்கு முன்னரே திருவள்ளுவர் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். தெரிந்து செயல்வகை எனும் 47வது அதிகாரத்தில் உள்ள முதல் குறட்பா இது பற்றித் தெளிவாகக் கூறியுள்ளதைப் பார்க்கின்றோம்.

அழிவதூஉம் ஆவதூம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் ஆழ்ந்து செயல் ( 461 )

எனும் இக் குறட்பா கூறுவது என்னவெனில், ஒரு செயலுக்கு ஆகும் செலவும், அது முடிவுற்றால் வரும் பயனும், நீண்டகால ஆதாயமும் ஆராய்ந்து பார்த்து அது நன்மை பயக்குமெனில் அச்செயலைச் செய்க என்கபதாம். இக்குறட்பா இன்றைய அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களுக்குப் பொருந்துவதாக அமைந்துள்ளது.

**பொருள் காத்தல்**

பொருளை ஈட்டுவது மட்டுமின்றி, ஈட்டிய பொருளைக் காப்பதிலும் திறமை வேண்டும் என்பது இன்றைய பொருளியலின் ஒரு அங்கமாகும். வலியறிதல் என்ற 48வது அதிகாரத்தில் வரும் 476, 477, 478, 479,480 ஆகிய குறட்பாக்கள் இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக,

ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை ( 478 )

என்ற குறள் கூறுவது என்னவெனில், செலவினம் கூடாதிருந்தால் பொருள் வரும் வழிகள் சுருங்கினாலும் குற்றமில்லை என்பதாம். அவ்வாறே,

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும் ( 479 )

என்ற குறள் வருவாயை அறிந்து வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

**காலத்தின் சிறப்பு**

இன்று உலகெங்கும் மிக ஆர்வமாக கற்கப்பட்டு, கடைப்பிடிக்கப்பட்டு வரும் வாணிப மேலாண்மையில் ( Business Management ), காலத்தின் மேலாண்மை ( Time Managemnt ) மிகவும் வலியுறுத்தப்படும் ஒன்றாகும். காலத்தின் சிறப்புகளை ஆட்சியாளருக்கும் மக்களுக்கும் ஏற்றவாறு காலமறிதல் என்ற 49வது அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களுமே வலியுறுத்துகின்றன.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின் ( 484 )

என்ற குறட்பா இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு

**இன்றைய மக்களாட்சியில் தேர்தல் முறை**

தெரிந்து தெளிதல் எனும் 51வது அதிகாரத்தில் உள்ள 501, 502, 507, 508 ஆகிய குறட்பாக்களில் மக்கள் எத்தகையவர்களை ஆட்சி பீடத்தில் அமர்த்த வேண்டும் என வள்ளுவர் சுட்டிக்காட்டுகையில் இன்றைய மக்களாட்சித் தேர்தல் முறையைப்

பற்றிய சிந்தனை அவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ஏற்பட்டுள்ளது என எண்ணுகையில் நமக்கு வியப்பு மேலிடுகிறது.

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரிபும்
நாணுடையான சுட்டே தெளிவு ( 502 )

எனும் 502வது குறட்பாவின் கருத்து என்னவெனில், நல்ல குடும்பத்தில் பிறந்து, ஒழுக்கம் காத்துப் பழிக்கு வெட்கப்படும் திறமைசாலியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் என்பதாம்.

அரசுப் பணியாளர்கள் பற்றி

அரசுப் பணிகளிள் எத்தகையவர் அமர்த்தப்படல் வேண்டும் என்பது பற்றி திருவள்ளுவர் தெரிந்து வினையாடல் என்ற 52வது அதிகாரத்தில் விளக்குகின்றார்.

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப் படும் ( 511 )
வாரிப் பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை ( 512 )
அன்பறிவு தோற்றம் அவா இன்மை இந்நான்கும்
நன்குடையோர் சுட்டே தெளிவு ( 513 )
இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் ( 517 )

ஆகிய இந்நான்கு குறட்பாக்கள் மேற்குறிப்பிட்ட கருத்தை நன்கு வலியுறுத்துகின்றன. இது தவிர, செங்கோன்மை அதிகாரத்தில் (55) ஆட்சியாளரின் நேர்மை பற்றியும், குற்றங்கட்குத் தகுந்த தண்டனை பற்றியும் கூறும் வள்ளுவர் பெருமான், கொடுங்கோன்மை அதிகாரத்தில் நெறிதவறிய கொடுங்கோல் ஆட்சியில் மக்கள்படும் துன்பங்களைச் சுட்டிக் காட்டுகின்றார்.

நாட்டின் சிறப்புக்கள்

ஒரு நாடு எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும் என்பதனை அரசியல், பொருளாதாரக் கண்ணோட்டங்களில், நாடு என்ற 74ஆம் அதிகாரத்தில் அருமையாக விளக்கியுள்ளார். இதிலுள்ள பத்துக் குறட்பாக்களுமே இக்கருத்தினை வலியுறுத்துகின்றன. எடுத்துக்காட்டாக,

உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும்
சேராது இயல்வது நாடு ( 734 )

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து ( 738 )

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தகு நாடு ( 739 )

ஆகிய குறட்பாக்களில், மிகுந்தபசி, நீங்காத நோய்கள், கொடிய பகை இம்மூன்றையும் நீக்குவது மட்டுமின்றி, சிறந்த காவல் முறையைக் கொண்டு, பிற நாடுகளை அண்டி வாழாமல் அமையும் நாடே சிறந்த நாடு என வலியுறுத்துகின்றது.

குடியியல் அத்தியாயத்தின் முதல் சில அதிகாரங்களில் திருவள்ளுவர், ஒரு நாட்டின் குடிமக்களின் பண்புகளைப் பற்றி விளக்கிவிட்டு, நன்றியில் செல்வம் எனும் அதிகாரத்தில் ( 101 ) இன்றையப் பொருளாதாரக் கொள்கையின் பின்புலமாக உள்ள வருமானப் பகிர்வு மற்றும் வருமான மறுபகிர்வு ( Income Distribution and Income Redistribution ) ஆகிய கோடுபாடுகட்கு வழிவகுத்துள்ளார். இதில் காணப்படும் சிறப்பான கருத்து, ஒருவன் தனது பொருட் செல்வத்தைத் தான் அனுபவிப்பது மட்டுமின்றி, பிறரோடும் பகிர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதாம்.

**உழவுத் தொழில்**

வள்ளுவத்தில் நாம் காணுகின்ற மற்றுமொரு மேலான பொருளாதாரக் கருத்து, உழவு பற்றியதாகும். வேளாண்மைப் பொருளாதாரத்தைச் சிறப்பான அம்சமாகப் பெற்றுள்ள இந்தியா, சீனா போன்ற நாடுகள் உழவுத் தொழிலுக்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றி உழவு எனும் 104வது அதிகாரத்தில் வள்ளுவர் விளக்கியுள்ளார்.

சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ( 1031 )

எனும் குறட்பா உழவுத் தொழிலின் சிறப்பினைச் சுட்டிக் காட்டுகிறது. வறுமையின் கொடுமை பற்றிக் கூறும் நல்குரவு எனும் 105வது அதிகாரம் இன்றும் வறுமையின் பிடியில் சிக்கி வாழும் சில நாட்டு மக்களின் நிலையை நம் கண்முன்னே கொண்டுவருகின்றது. மக்கள் வறுமையில் வாடும் நாட்டில் அமைதி இராது. அந்நாட்டின் ஆட்சியாளரும் ஆட்சியில் நீடிக்க இயலாது என்பதனை பல நாடுகளின் வரலாற்று வாயிலாக நாம் அறிய முடிகிறது.

முடிவுரை

இவ்வாறு, இந்த முப்பால் மொழியின் பல்வேறு அதிகாரங்களில், பொருளியல், அரசியல், ஆட்சியியல், சமூகவியல் சார்ந்த கருத்துக்களின் சாராம்சங்களை உரிய முறையில் மிகச் சுருக்கமாக எக்காலத்திற்கும் பொருந்துமாறு கூறியுள்ள வள்ளுவப் பெருந்தகை பொய்யா மொழிப்புலவர் எனும் சிறப்பைத் தாங்கித் தமிழினத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார். இன்று திருக்குறள் உலகிற்கே சமர்ப்பிக்கப்பட்ட பொய்யா மொழி என்றால் மிகையாகாது.

முனைவர் அ. விசயராசன்

பேராசிரியர் ( ஓய்வு ) பொருளியல் துறை
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை

அகம்

4-339 கல்லூரி வீதி,
தாசில்தார்நகர்,
மதுரை 625 020.
தமிழ்நாடு, இந்தியா
தொ.பே.எண் 0091 - 0452 - 2535803